தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா.1 நாள் 26.03.2026

| SC. No. | 4/2026 | | |
|---|---|---|---|
| பெயர் | ராக் பெல்லர் | த/பெ. | ஸ்டீபன் |
| வயது | 51 | தொழில் | வியாபாரம் |
| கிராமம் | மயிலாடுதுறை | தாலுக்கா | மயிலாடுதுறை. |

**(1 முதல் 6 எதிரிகள் ஆஜர், .)**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் தற்போது மயிலாடுதுறை ஆரோக்கிய நகரில் வசித்து வருகிறேன். நான் ஜல்லி வியாபாரம் செய்து வருகிறேன். பட்டியல் சாட்டி 2 தனுஷ் பாலாஜி எனது மகன் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது மகன் தனுஷ் பாலாஜி துபாய் நாட்டில் வேலை செய்து விட்டு விடுமுறையில் வந்திருந்தார். வினோத்தின் அம்மாவை சாராய வழக்கிற்காக மயிலாடுதுறை போலீசார் கைது செய்துவிட்டார்கள். அதற்கு எனது மகன் தான் காரணம் என்று நினைத்து என் மகனிடம் அடிக்கடி பிரச்சனை செய்தார்கள். அதனை என் மகன் என்னிடம் வந்து சொன்னார். கடந்த 01.01.2024 வருடம் மதியம் 2.30 அல்லது 3.00 மணியளவில் காய்கறி வாங்குவதற்கு எனது மகன் தனுஷ் பாலாஜி கடைக்கு சென்றார். ஒரு அரை மணி நேரம் கழித்து என் மகனை எதிரிகள் அனைவரும் தூக்கிக்கொண்டு வந்து எனது வீட்டு வாசலில் போட்டுவிட்டு, இனிமேல் எனது மகன் வந்தால் கொன்று விடுவேன் என்று மிரட்டினார்கள். உடனே எனது மகன் சுயநினைவில் தான் இருந்தார். அவர் தன்னை எதிரிகள் அனைவரும் பைப்பாலும், கம்பியாலும் அடித்ததாக என்னிடம் சொன்னார். பின்பு எனது மகனை காரில் மயிலாடுதுறை பொது அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். எனது மகனுக்கு வலது காலில் பலத்த காயமும், தாடையிலும் காயம் இருந்தது. பின்பு, போலீசார் வந்து எனது மகனை விசாரிக்க வந்தனர். எனது மகனுக்கு தாடையில் பலத்த

CJM, MAYILADUTHURAI.

காயம் ஏற்பட்டிருந்ததால் சம்பவம் குறித்து நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். பின்பு, மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்பு, அங்கிருந்து காமாட்சி தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். இது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது. அ.சா.ஆ.1 புகாரை போலீசார் தான் எழுதினார். என் மீது நீதிமன்றத்தில் குற்ற வழக்குகள் உள்ளது. அதன் காரணமாக எனக்கு வெளி நபர்களிடம் முன் விரோதம் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு விபரங்கள் சொல்லகேள்வி தான். ஏற்கனவே எதிரிகள் குடும்பத்தினர் மீது காழ்புணர்ச்சி இருந்ததன் காரணமாக அவர்கள் எழுதிக்கொடுத்த புகாரில் நான் கையொப்பமிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் என்னிடம் புகார் பெற்றுக்கொண்டார்கள், என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. மகனை நான் மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை, என் மனைவி தான் அழைத்து சென்றார். பின்பு, சாட்சி பின்னிட்டு மருத்துவமனைக்கு நானும், என் மனைவி அழைத்து சென்றதாக கூறினார். மருத்துவரிடம் சம்பவம் நடந்த விபரம் குறித்து எனது மனைவி தான் சொன்னார். போலீசார் எனது மனைவியை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை. எனக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

S-ராஜவேல் ராஜ்

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா.2 நாள் 26.03.2026

| | | | |
|---|---|---|---|
| SC. No. | 4/2026 | | |
| பெயர் | பிரேம்நாத் | த/பெ. | உபகரசாமி |
| வயது | 43 | தொழில் | கூலி. |
| கிராமம் | ஆரோக்கியநாதபுரம் | தாலுக்கா | மயிலாடுதுறை |

**(1 முதல் 6 எதிரிகள் ஆஜர், .)**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் தற்போது மயிலாடுதுறை ஆரோக்கியநாதபுரத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ராக் பெல்லர் மற்றும் பட்டியல் சாட்சி 2 தனுஷ் பாலாஜியை தெரியும். கடந்த 01.01.2024 அன்று நான் வேலைக்கு சென்றுவிட்டு மாலை 4.00 மணியளவில் எங்கள் தெரு வழியாக வந்துக்கொண்டிருந்தபோது எரகளி தெருவில் கூட்டமாக இருந்தது. என்னவென்று சென்று பார்த்தபோது அங்கிருந்த தெருக்காரர்கள் தனுஷ் பாலாஜிக்கும் எதிரிகளுக்கும் சண்டை ஏற்பட்டது என்று சொன்னார்கள். பின்பு, மாலை 5.00 மணிக்கு போலீசார் சம்பவ இடம் வந்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சி எனக்கூறி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :–

போலீசார் என்னை விசாரித்தபோது கடந்த 01.01.2024 அன்று மாலை 4.00 மணியளவில் நானும், பிரேம்குமார் என்பவரும் தூக்கனாங்குளம் எரகளி தெருவில் நடந்து சென்றுக்கொண்டிருந்தபோது எங்களுக்கு முன்னால் தனுஷ்பாலாஜி சென்றுக்கொண்டிருந்தார் என்றும், அவ்வாறு

CJM, MAYILADUTHURAI.

தனுஷ் பாலாஜி சென்றபோது, அவரை எதிரிகள் 6 பேரும் அசிங்கமாக திட்டி கம்பியாலும், கட்டையாலும் அடித்து தனுஷ பாலாஜி கொலை செய்ய முயற்சித்தார்கள் என்றும், நான் நேரடியாக பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 07.01.2024 அன்று மாலை 1.30 மணியளவில் நானும், பிரேம்குமார் என்பவரும் காவேரி நகர், கடைத்தெரு வழியாக சென்றுக்கொண்டிருந்தபோது சூரியன் என்பவரையும், சந்திரன் என்பவரையும் மயிலாடுதுறை காவல் ஆய்வாளர் கைது செய்தார் என்றும், அப்போது சூரியன் என்பவர் தன்னிச்சையாக காவல் ஆய்வாளரிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், பிரேம்குமார் என்பவரும் சாட்சியாக கையொப்பமிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் விசாரித்தபோது சம்பவத்தை நேரடியாக பார்த்தது குறித்தும், எதிரிகளை கைது செய்தது குறித்தும், எதிரி சூரியன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக கையொப்பம் செய்தது குறித்தும் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :-

இல்லை என முறையீடு செய்யப்பட்டது.

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.

# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
# மயிலாடுதுறை

அ.சா.3 நாள் 26.03.2026

| | | | |
|---|---|---|---|
| SC. No. | 4/2026 | | |
| பெயர் | குணசேகரன் | த/பெ. | தங்கையன் |
| வயது | 46 | தொழில் | கேட்டரிங் |
| கிராமம் | மயிலாடுதுறை. | தாலுக்கா | மயிலாடுதுறை. |

**(1 முதல் 6 எதிரிகள் ஆஜர், .)**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் தற்போது மயிலாடுதுறை எரகளி தெருவில் வசித்து வருகிறேன். நான் சமையல் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ராக் பெல்லர் மற்றும் பட்டியல் சாட்சி 2 தனுஷ் பாலாஜியை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். 01.01.2024 அன்று வேலையை முடித்து விட்டு சுமார் 4, 5 மணிக்கு எரகளி மதகடி அருகே நான் சென்றுக்கொண்டிருந்தபோது தனுஷ் பாலாஜி அடித்துக்கொண்டிருந்தார்கள். அதன், பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். பின்பு, அவரை அடித்து விட்டு வீட்டு வாசலில் போட்டுவிட்டதாக ஊர்க்காரர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்தை சுமார் 5 மணிக்கு மீண்டும் நான் அங்கு வந்தபோது போலீசார் என்னை விசாரித்தார்கள், பின்பு வரைபடம் வரைந்தார்கள் அதற்கு நான் சாட்சியாக கையெழுத்து போட்டேன். என்னுடன் பிரேம்சந்தர் என்பவரும் கையெழுத்து போட்டார். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–

போலீசார் விசாரணையில் சம்பவம் நேரடியாக தெரியும் என்று கூறியுள்ளேன். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. ஏற்கனவே தட்டச்சு செய்யப்பட்ட பேப்பரில் சம்பவ

CJM, MAYILADUTHURAI.

த. குணசேகரன்

இடத்தில் வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். காயம்பட்ட தனுஷ் பாலாஜி எங்கள் ஊரைச் சேர்ந்தவர். அவர் தகப்பனாரை அழைத்துகொண்டு காவல் நிலையம் சென்றேன். போலீசார் என்னை விசாரிதார்களா, கையெழுத்து எதுவும் பெற்றார்களா என்றால் இல்லை. இந்த வழக்கு குறித்து எதுவும் தெரியாது என்றாலும், புகார்தாரர் எங்கள் தெருவைச் சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :–

இல்லை.

T. [signature]

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

[signature]

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.